(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) கோபி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கொளப்பலூர், சிறுவலூர், அயலூர், கெட்டிசேயூர், கலிங்கியம், ஆகிய ஊர்களுக்கு கூட்டு குடிநீர்த் திட்ட மதிப்பீடுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தயாரிப்பில் இருக்கின்றன. நம்பியூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கோஷணம் கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு தோண்டும் வேலை முடிவடைந்து ஏனைய வேலைகள் நடைபெற்று வருகின்றன. தாழ்குனி ஊராட்சி 6-வது வகையைச் சார்ந்த (நல்ல குடிநீர் ஆதாரங்கள் உள்ள சிற்றூர்) ஊராட்சியானதால் தற்போது அங்கு குடிநீர் வசதி செய்யும் திட்டம் இல்லை.

(ஆ) தயாரிக்கப்பட்டு வரும் திட்டத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழக அரசு ஆகியவற்றின் ஒப்புதல் கிடைத்தவுடன் திட்ட நிறைவேற்றப் பணிகள் தொடங்கும்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இது இவ்வாறு பல ஆண்டு காலமாக பரிசீலனையில் இருந்து கொண்டிருப்பதால் அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்கள் 100 அடி ஆழம் கிணறு தோண்டினாலும் தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்பட்டு கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு உடனடியாக பரிசீலித்து இந்த ஆண்டே இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, விரைவில் எடுத்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்திலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள்

வினா எண். 174—திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வடாற்காடு மாவட்டத்தில் வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, ராணிப்பேட்டை ஆகிய பகுதிகளில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் கடந்த ஒரு மாதமாக மூடப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

1981 பிப்ரவரி 4]

(ஆ) ஆம் எனில், அத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆயிரக் கணக்கான தொழிலாளர்களையும் தொழிலையும் பாதுகாக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டத்தில் ராணிப்பேட்டை, ஆம்பூர், காட்பாடி, திருவலம், ரத்தினகிரி, ஆகிய இடங்களில் 9 தோல் பதனிடும் நிறுவனங்கள் மூடப்பட்டு சுமார் 300 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த 9 நிறுவனங்களில், எந்த ஒரு நிறுவனத்திலும் வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 50க்கும் குறைவானதால் தொழிற் தகராறு சட்டப்படி மூடுதல் அறிவிப்புக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. மேலும் இரண்டு நிறுவனங்கள் மூடுதல்பற்றிய பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டபடியாலும், மீதமுள்ள 7 நிறுவனங்கள் பற்றிய முறையான தொழிற் தகராறு எதுவும் எழுப்பப் படவில்லையாதலாலும், தொழிற் தகராறு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவரவர்களே, மிகவும் ஏழை எளிய மக்கள் வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம் பட்டு, ராணிப்பேட்டை ஆகிய பகுதிகளில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்றனர். அவர்கள் கடந்த ஒரு மாத காலமாக பசியாலும் பட்டினியாலும் வாடுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு தற்காலிக நிவாரணமாக ஊதியம் தருவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே இப்போது இருக்கக்கூடிய நிலைமை பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முறையீடு செய்வார்களேயானால் அதை இந்த அரசு கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ந. குலசேகர பாண்டியன் : தலைவரவர்களே, சில தோல்பதனிடும் தொழிற்சாலைகளை இவ்வாறு ஆண்டு தோறும் அதாவது ஆண்டுக்கு இரண்டு மாதங்கள் என்ற அளவில் மூடிவிடுவது என்ற நிலை இருக்கின்றது. தொடர்ந்து லாபம் கிடைக்கவில்லை என்ற நோக்கத்தினால் அப்படி மூடிவிடுகின்றனர். ஆகவே தொடர்ந்து அவற்றை நடத்துவதற்குரிய வகையிலே அரசு உத்திரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே ஒரு தொழிற்சாலையை நடத்துவதும், அதனை நடத்தாமல் இருப்பதும் தொழில் உரிமையாளர்களின் உரிமை என்று இந்தியத் தலைமை நீதிமன்றமே தீர்ப்பளித்துவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, ஹாக்ஃப் டான்ட் தோல்களை ஏற்றுமதி செய்வது என்ற மத்திய அரசின் கொள்கையின் காரணமாகத்தான் வட ஆற்காடு மாவட்டத்தி லும் மற்ற இடங்களிலும் உள்ள தோல் பதனிடும் தொழிற் சாலைகள் மூடப்பட்டு விடுகின்றன என்று சொல்லப்படுகின்றது. ஆகவே மத்திய அரசின் கொள்கையை மாற்ற மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இப்பொழுது தோல்பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. ஒரு தொழில் தகராறு என்கிற பிரச்னையாக அரசு இதனைக் கருதா மல் தோல் தொழிலில் ஏற்பட்டிருக்கக் கூடிய நிலைமைகளின் காரணமாக மிகவும் பின்தங்கிய பகுதியான, வறட்சிப் பகுதி யான வட ஆற்காடு மாவட்டத்தில் வாழ்கின்ற 10,000-க்கும் அதிகமான பின்தங்கிய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்ற கார ணத்தினால், அதையும் கவனத்தில் கொண்டு மத்திய அரசோடு தோல் கொள்கை சம்பந்தமாக விவாதித்து, ஏற்றுமதிக்கு ஆர்டர்கள் பெறுவதற்கு உரிய முறையிலும் இத் தொழிலை வளர்க்கும் வகையிலும் கவனம் செலுத்தி ஆவன செய்வதற்கு இம் மாநில அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் :

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் கொடுக்கப்பட்டிருக் கின்ற கேள்வி வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதால் பாதிக்கப் பட்டுள்ள 300 தொழிலாளர்களைப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதோ மேஜர் பாலிசி மேட்டர் பற்றியது. அதனால் அதற்குரிய மேஜர் கேள்வியாக தனியாக போடுவாரேயானால், ஏற்ற தகவல்களையும் சேகரித்து பதில் தருவதோடு, ஏற்ற முயற்சியும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடகனாறு அணை

*வினா எண். 175—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், திரு. ப.செ. சென்னிமலை என்கிற பி.எஸ். கந்தசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1977-ஆம் ஆண்டு வெள்ளத்தில் முழுமையாக உடைந்து விட்ட வேடசந்தூர் தாலுகாவில் உள்ள குடகனாறு அணையை மீண்டும் கட்டும் பணி 1980-81-ஆம் ஆண்டில் தொடங்கப்பட உள்ளதா ?